




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 22.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்







# தேசிய நிகழ்வுகள்

- **கொரோனா வைரஸ்** தொற்று நாட்டில் **தீவிரமடைந்துள்ளதை** அடுத்து, **மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள், என்பிஆர் மேம்படுத்தும் பணிகள் காலவரையின்றி தாமதமாகும்** என்று உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
  - நாடு முழுவதும் ஏப்ரல் 1-ம் தேதி சென்செஸ், என்பிஆர் பணிகளின் முதல் கட்டம் தொடங்கத் திட்டமிட்ட நிலையில் அது ஒத்திவைக்கப்படுகிறது.
  - **செய்தி துளிகள்:**
    - மத்திய அரசு கொண்டுவந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம், என்பிஆர், என்ஆர்சி ஆகியவற்றுக்கு எதிராக பல்வேறு நகரங்களில் போராட்டம் நடந்து வருகிறது.
    - **என்பிஆர் பணிகளுக்காக** மத்திய அரசு **ரூ.3,914 கோடி ஒதுக்கி இருந்தது.**

- நாடுமுழுவதும் மக்கள் ஊரடங்கை கடை பிடித்து வருவதற்கும், கொரோனா எதிர்ப்பு களத்தில் போராடும் சுகாதாரத்துறை பணியாளர்களை பாராட்டும் வகையில் 5 மணியளவில் ஆங்காங்கே இருந்து ஓசை எழுப்பியதற்கு மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார்.
  - **“மக்கள் ஊரடங்கு : கரோனா வைரஸ் எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த நாடு நன்றி தெரிவிக்கிறது. கொடிய நோயை எதிர்த்து போராடும்**

**நீண்ட நெடிய போராட்டத்தில் நமக்கு கிடைத்த முதல் வெற்றி இது**" எனக் கூறியுள்ளார்.

- **செய்தி துளிகள்:**
  - கொரோனா வைரஸ் பரவலில் இந்தியா தற்போதும் 2-ம் கட்டத்தில் இருப்பதால், அதற்குள் கட்டுப்படுத்த மத்திய அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகிறது.

- **கொரோனா தடுப்பு நடவடிக்கைகள்** குறித்து மத்திய அரசின் கேபினட் செயலர், பிரதமரின் முதன்மைச் செயலர் மற்றும் மாநில தலைமைச் செயலர்கள் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.
  - **டெல்லி, சத்தீஸ்கர் உள்பட 21 மாநிலங்களில் உள்ள 75 மாவட்டங்கள் முடக்கம்** செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் மாஹே மாவட்டம் முடக்கம் செய்யப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - இந்த பட்டியலில் தமிழகத்தை பொறுத்தவரையில் சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய 3 மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஜூனியர் என்பிஏ கூடைப்பந்து திட்டத்தின் கீழ் தமிழகத்தைச் சேர்ந்த 550 பள்ளிகள் இணைக்கப்பட்டுள்ளன. **கூடைப்பந்தை** உலகம் முழுவதும் **பிரபலப்படுத்தும் நோக்கில் ஜூனியர் என்பிஏ**

**திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

- ○ **ஒவ்வொரு நாட்டிலும் சிறப்பாக ஆடும் 13 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்** இத்திட்டத்தின் கீழ் **தேர்வு செய்யப்பட்டு சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.** இந்தியா முழுவதும் **13000 பள்ளிகளில்** இருந்து அளிக்கப்பட்டுள்ளது. **1 கோடி பேருக்கு பயிற்சி**
- ○ **செய்தி துளிகள்:**
    - ▪ அமெரிக்காவின் என்பிஏ கூடைப்பந்து லீக் உலகக் புகழ் பெற்றதாகும். இதில் பங்கேற்று ஆடும் வீரர்கள் உலக, ஒலிம்பிக் சாம்பியன் பட்டங்களை வென்ற சிறப்புடையவர்கள் ஆவர்.

## முக்கிய தினங்கள்

- **உலக நீர் நாள்** (World Day for Water அல்லது World Water Day), ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்துக்கு இணங்க ஆண்டு தோறும் **மார்ச் 22** ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.
    - ○ நீர் வளத்தின் ஒட்டுமொத்தத் திட்டத்தையும் நிர்வாகத்தையும் மேம்படுத்தி நீர் வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாள்தோறும் கடுமையாகியுள்ள நீர் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பது என்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாகும்.
    - ○ அதேவேளையில் மக்களிடையே விரிவாக பிரச்சாரம் செய்து மக்களிடையே அந்தந்த **நாட்டின் நீர் வளப் பாதுகாப்பு பற்றி**

விழிப்புணர்வு வளர்த்தி ஏற்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

# திருக்குறள்

குறள் : 145

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : பிறனில் விழையாமை

**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**

**விளியாது நிற்கும் பழி.**

**விளக்கம்:** ‘இவளை அடைதல் எளிது என்று நினைத்துப் பிறன் வீட்டில் நுழைகின்றவன், எப்பொழுதும் நீங்காத குடிப்பழியை அடைவான்.

We Shine Academy TM